[2002 மே 2

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியத்தைச் சார்ந்த கொண்டையாம்பட்டியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்வு செய்வதற்கான கருத்துரு இதுவரை பெறப்படவில்லை. கருத்துரு பெற்றவுடன், அதைப்பற்றி மேல்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு அரசின் நிதிநிலைக்குட்பட்டு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி.ஆர். ராஜாங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணை உள்ளம் கொண்ட அன்னை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, ரூ. 2 இலட்சம் பணம் கட்ட வேண்டும் என்பதைத் தளர்த்தி, அலங்காநல்லூர் ஒன்றியம், கொண்டையாம்பட்டியில் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக வருகிற ஆண்டிலாவது மாற்றித் தர முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பொதுமக்கள் பங்குத் தொகையாகிய 2 இலட்ச ரூபாயைக் கட்டுவதற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள். இப்பொழுது இருக்கும் நிதிநிலையைப் பார்க்கும்போது பலபேர் ரூ. 2 இலட்சம், 1 இலட்சம் கட்டியுள்ள பள்ளிகளுக்குக்கூட உயர்த்திக் கொடுப்பதற்கு ஒரு சில பிரச்சினைகள் இருந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கின்ற அந்தக் கல்வி நிலையத்தில், உயர்நிலைப் பள்ளியில் 10-ஆம் வகுப்பில் 100 பேர் இருக்க வேண்டும். ஆனால் 66 பேர்கள்தான் இருக்கின்றார்கள். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்க வேண்டுமென்றால் முதலில் 2 இலட்சம் ரூபாய் பங்குத் தொகையைக் கட்டியதற்குப் பிறகு அரசினுடைய நிதிநிலைக்கு ஏற்ப அதைப்பற்றி சிந்திக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 261, திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

2002 மே 2]

261—

மகளிர் மேல்நிலைப் பள்ளி

***9185—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனமரத்துப்பட்டி தொகுதி, ஜாரி கொண்டலாம்பட்டி அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பனமரத்துப்பட்டி தொகுதி, ஜாரி கொண்டலாம்பட்டி அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்காக இதுவரையில் கருத்துரு பெறப்படவில்லை. பெறப்பட்ட பிறகு, இது உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பள்ளியில் தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவிகள் அதிக அளவில் படித்துக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் மேற்கொண்டு படிக்க வெகுதூரம் செல்ல வேண்டியிருப்பதால், ஏற்கெனவே அரசுக்குச் செலுத்தப்படக்கூடிய 2 இலட்சம் ரூபாயும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் செலுத்தப்பட்டிருக்கின்றது; தேவையான மாணவிகள் அங்கு படிக்கிறார்கள்; அரசு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்குத் தேவையான நிலமும் அங்கே இருக்கின்றது; மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இதுகுறித்துக் கனிவோடு பரிசீலித்து, இந்த ஆண்டே அந்தப் பள்ளியை மகளிர் மேல்நிலைப் பள்ளி ஆக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2002 மே 2

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அரசானது பொறுப்பேற்ற உடனேயே சென்ற ஆண்டு மட்டும், இதுவரை எந்த ஓர் அரசும் செய்யாத அளவிற்கு 125 உயர்நிலைப் பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தி ஆணை பிறப்பித்து இந்த ஆண்டும் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றோம். அதற்குரிய நிதியையும் மாண்புமிகு நிதியமைச்சரிடம் கேட்டு இருக்கின்றோம். அவர் அந்த நிதியைத் தந்த உடனேயே, மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும். காரணம், அவர் சொன்னதுபோல அது பெண்கள் பள்ளியாகும். பெண்களுக்கு நல்ல கல்வி தருவதுதான் இந்த அரசினுடைய கொள்கையாக இருக்கிறது. ஆகவே இதுபற்றிச் சிந்திக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 262, டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

262—

சித்த மருத்துவர்கள்

***3980—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதியிலுள்ள அரசு மருத்துவமனைகளில் சித்த மருத்துவர்களை விரைவில் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டத்தில், குளத்தூர் தொகுதியிலுள்ள அரசு மருத்துவமனைகளில் இயங்கிவரும் சித்த மருத்துவப் பிரிவுகளில் சித்த உதவி மருத்துவர்களின் பணியிடங்கள் நிரப்பப்பட்டு தற்போது முழுமையாக பணிபுரிந்து வருகிறார்கள். காலியிடம் எதுவும் தற்போது இல்லை.